# श्री शङ्कराचार्य अष्टोत्तर शतनामादि

## ஸ்ரீசங்கராசார்ய அஷ்டோத்தர சதநாமாதி

ஸ்ரீ ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய மஹாஸம்ஸ்தானம்
தக்ஷிணாம்னாய ஸ்ரீ சாரதா பீடம், சிருங்கேரி.

# Sri Shankaracharya Ashtottara Shatanamaadi

| | | |
|---|---|---|
| **Published by** | : | Vidya Bharati Press<br>(An inhouse publication wing of<br>Sringeri Sri Sharada Peetham, Karnataka<br>Ph: 080-23211168) |
| **First Edition** | : | January 2017 |
| **Copies** | : | 35000 |
| | | |
|---|---|---|
| **Copyright** | : | Dakshinamnaya Sri Sharada Peetham,<br>Sringeri |
| | | |
|---|---|---|
| **Contribution Value** | : | Rs. 5/- |
| **Copies Available at** | : | Dakshinamnaya Sri Sharada Peetham,<br>Sringeri<br>Email : publications@sringeri.net |

## ஜகத்குரு சங்கராசார்ய ஸ்ரீஸ்ரீவிதுசேகரபாரதீ ஸன்னிதானத்தின் அனுக்ரஹ ஸந்தேசம்

பகவான் பகவத்கீதையில் "பரித்ராணாய ஸாதூனாம் வினாசாய ச துஷ்க்ருதாம் தர்மஸம்ஸ்தாபனார்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்று பிரதிஞ்ஞை செய்துள்ளார். "ஸனாதன தர்மத்தைக் காப்பாற்றுவதற்காகவும், அதர்மத்தை அழிப்பதற்காகவும் ஒவ்வொரு யுகத்திலும் நான் பூமியில் அவதரிப்பேன்" என்பது இதன் அர்த்தம். அதன்படியே இந்த கலியுகத்தில் பகவான் ஸ்ரீசங்கரபகவத் பாதாசார்யாளின் ரூபத்தில் அவதரித்தான்.

ஸ்ரீசங்கரபகவத்பாதர் வேதத்திற்கு புறம்பான அனேக மதங்களைக் கண்டித்து நம்முடைய ஸனாதன வைதிக தர்மத்தின் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். நாட்டின் அனைத்து இடங்களிலும் தர்மப் பிரசாரம் செய்து, மக்களைத் தர்ம மார்கத்தில் செல்லும்படிச் செய்தார். இது அவர் செய்த பேருதவியாகும். இந்த பேருதவியினாலேயே இன்று நாம் கொஞ்சமாவது தர்மத்தை ஆசரணம் செய்து கொண்டு அதன் மூலம் நற்பயனை அடைந்துகொண்டிருக்கிறோம்.

அவர் ஸ்தாபனம் செய்த நான்கு ஆம்நாய பீடங்களில் முதன்மையானதும் முக்கியமானதுமான தக்ஷிணாம்னாய சிருங்கேரி சாரதாபீடத்தின் அதிபதியாக விளங்கிவரும் நம் குருநாதர், ஜகத்குரு சங்கராசார்ய ஸ்ரீஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளின் பரமானுக்ரஹத்துடன் "**ஸ்ரீசங்கராசார்ய அஷ்டோத்தர சதநாம பாராயண யஜ்ஞம்**" என்னும் நிகழ்ச்சி மாநிலத்தின் அனைத்து பகுதிகளிலும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஸ்ரீசங்கரபகவத் பாதாசார்யாளின் நாமாக்களை குழுவாகச் சேர்ந்து பாராயணம் செய்தும், அவரைச் சிறப்பாக ஆராதிப்பதன் மூலமும் ஒவ்வொரு ஆஸ்திகனும்

ச்ரேயஸ்ஸை அடையட்டும், உலகத்திற்கு மங்களம் உண்டாகட்டும் என்பதே இந்த யஜ்ஞத்தின் உத்தேசமாக இருக்கிறது. பகவானுடைய நாமங்களுக்கு மிகுந்த சக்தியிருக்கிறது. நாம் பகவானை சதுர்விம்சதி (24) நாமங்களினாலும், அஷ்டோத்தர சத (108) நாமங்களினாலும், த்ரிசதி (300) நாமங்களினாலும், ஸஹஸ்ர (1000) நாமங்களினாலும் பூஜிக்கின்றோம். பகவானின் ஒரே ஒரு நாமத்திற்கு எவ்வளவு சக்தியிருக்கிறது என்பதை சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. "ஏகஸ்ய நாம்னோ யா சக்தி: பாதகானாம் நிவர்தனே । தன்னிவர்த்யமகம் கர்தும் நாலம் லோகாச்சதுர்தச ॥" பகவானின் ஒரு நாமத்தை உச்சரிப்பதால் எவ்வளவு பாபம் நாசமாகுமோ அவ்வளவு பாபத்தைச் செய்வதற்கு பதினான்கு லோகத்தில் இருப்பவர்களாலும் முடியாது. அதாவது பதினான்கு லோகத்தில் இருக்கும் அனைவரும் சேர்ந்து எவ்வளவு பாபம் செய்வார்களோ அதற்கும் அதிகமான பாபங்களை நீக்கும் சக்தி பகவானின் ஒரு நாமத்திற்கு இருக்கிறது. இவ்வாறிருக்கையில் பகவத்பாதரின் அஷ்டோத்தர சதநாமத்தை நாம் மிகுந்த நம்பிக்கையுடன் பாராயணம் செய்தால் நம்முடைய அனைத்து பாபங்களும் நீங்கி, நமக்கு நன்மைகள் உண்டாகும் என்பதில் சிறிதும் சந்தேஹமில்லை.

இப்படிப்பட்ட புண்யப்ரதமான ஸ்ரீசங்கராசார்ய அஷ்டோத்தர சதநாம பாராயண யஜ்ஞத்தில் ஒவ்வொருவரும் அத்யந்த ச்ரத்தாபக்திகளுடன் பங்குகொண்டு ஸ்ரீசங்கரபகவத்பூஜ்ய பாதாசார்யாளின் பரமானுக்ரஹத்தினால் ச்ரேயஸ்ஸை அடைந்து க்ருதார்த்தராக வேண்டும் என்று விரும்புகிறோம்.

# முன்னுரை

பகவானின் நாமோச்சாரணையின் மஹத்துவம் மஹாபாரதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தர்மராஜன் பீஷ்மரைக் குறித்து – 'கோ தர்ம: ஸர்வதர்மாணாம் பவத: பரமோ மத:' (உங்களுடைய கருத்தில் எல்லா தர்மங்களை விட சிறந்த தர்மம் எது? ) என்று கேட்கிறான். 'ஏஷ மே ஸர்வதர்மாணாம் தர்ம: அதிகதமோ மத: யத்பக்த்யா புண்டரீகாக்ஷம் ஸ்தவைரர்சேன்னரஸ்ஸதா' (பகவானை பக்தியுடன் பூஜிப்பது எல்லா தர்மங்களை விட மிகவும் சிறப்பானது என்பது எனது கருத்தாகும்) என்று பீஷ்மர் தர்மராஜனுக்கு உபதேசிக்கிறார். பீஷ்மரின் இந்த கருத்தின் பொருளை விஷ்ணுஸஹஸ்ரநாமத்தின் பாஷ்யத்தில் ஆதிசங்கராசார்யாள் 'பகவானின்நாமோச்சாரணை என்னும் இந்த தர்மத்தை ஆசரிப்பதற்கு பிரதி ஒரு மனிதனாலும் இயலும் என்பது இதன் சிறப்புத் தன்மை' என்று விவரித்திருக்கிறார். நாமோச்சாரணையினால் மனிதன் மிக எளிதில் தன்னுடைய ஸர்வபாவங்களிலிருந்தும் விடுபட முடியும். மேலும் இந்த தர்மத்தைச் செய்ய மனிதனாகப் பிறந்த எல்லாரும் தகுதி உள்ளவர்கள்.

சுமார் 1200 வருடங்களுக்கு முன் ஸனாதனதர்மம் நலிவுற்ற காலத்தில் பகவான், ஸ்ரீ ஆதிசங்கராசார்யாளின் ரூபத்தில் அவதாரம் செய்து தர்மத்தைக் காப்பாற்றினார். அப்பேற்பட்ட மஹிமை வாய்ந்த ஸ்ரீஆதிசங்கராசார்யாளின் அஷ்டோத்தர சதநாமத்தின் பாராயணம், எல்லா பாபங்களையும் நீக்கிவிடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இந்த நல்ல நோக்கத்துடன் சிருங்கேரி ஜகத்குரு சங்கராசார்ய ஸ்ரீஸ்ரீபாரதீ தீர்த்த மஹாஸன்னிதானம் மற்றும் ஜகத்குரு சங்கராசார்ய ஸ்ரீஸ்ரீவிதுசேகரபாரதீ ஸன்னிதானம் அவர்களின்

திவ்யானுக்ரஹத்துடன் ஸ்ரீ சாங்கர தத்வப்ரஸார அபியானத்தின் மூலம், ‘ஸ்ரீ சங்கராச்சார்ய அஷ்டோத்தர சதநாம பாராயண யஜ்ஞ’த்தை மாநிலத்தின் அனைத்து இடங்களிலும், நிகழ்த்த திட்டமிடப்பட்டுள்ளது. கடவுள் நம்பிக்கையுள்ள பிரதி ஒரு பக்தரும், ஜாதி, குல, வயது வேற்றுமை இல்லாமல், இந்த யஜ்ஞத்தில் பங்கு கொண்டு, பகவானின் நாமஜபத்தைச் செய்வதன் மூலம் பகவானின் கிருபைக்குப் பாத்திரமாக வேண்டும் என்பது எமது விருப்பம். பாராயணத்திற்குத் தேவைப்படும் ஸ்தோத்ரங்களையும் அஷ்டோத்தர சதநாமாவளிகளையும் உள்ளடக்கிய இந்த புஸ்தகத்தின் பயனை அனைவரும் பெறவேண்டும். இந்த புஸ்தகத்தின் பதிப்பில் உதவிய அனைவருக்கும் என்னுடைய நன்றிகள் உரித்தாகுக.

‘குருஸேவாதுரீண’
டாக்டர் **வி.ஆர்.கௌரீசங்கர்**
CEO, Sringeri Sri Sharada Peetham



## एकश्लोकी

किं ज्योतिस्तव भानुमानहनि मे रात्रौ प्रदीपादिकं
स्यादेवं रविदीपदर्शनविधौ किं ज्योतिराख्याहि मे ।
चक्षुस्तस्य निमीलनादिसमये किं धीर्धियो दर्शने
किं तत्राहमतो भवान् परमकं ज्योतिस्तदस्मि प्रभो ॥

## श्रीगुरुवन्दनम्

शङ्कारूपेण मच्चित्तं पङ्कीकृतमभूद्यया ।
किङ्करी यस्य सा माया शङ्कराचार्यमाश्रये ॥ १ ॥

प्रह्लादवरदो देवो यो नृसिंहः परो हरिः ।
नृसिंहोपासकं नित्यं तं नृसिंहगुरुं भजे ॥ २ ॥

श्रीसच्चिदानन्द शिवाभिनव्यनृसिंहभारत्यभिधान् यतीन्द्रान् ।
विद्यानिधीन् मन्त्रनिधीन् सदात्मनिष्ठान् भजे मानवशम्भुरूपान् ॥ ३ ॥

सदात्मध्याननिरतं विषयेभ्यः पराङ्मुखम् ।
नौमि शास्त्रेषु निष्णातं चन्द्रशेखरभारतीम् ॥ ४ ॥

विवेकिनं महाप्रज्ञं धैर्यौदार्यक्षमानिधिम् ।
सदाभिनवपूर्वं तं विद्यातीर्थगुरुं भजे ॥ ५ ॥

अज्ञानां जाह्नवीतीर्थं विद्यातीर्थं विवेकिनाम् ।
सर्वेषां सुखदं तीर्थं भारतीतीर्थमाश्रये ॥ ६ ॥

विद्याविनयसम्पन्नं वीतरागं विवेकिनम् ।
वन्दे वेदान्ततत्त्वज्ञं विधुशेखरभारतीम् ॥ ७ ॥

## ஏகச்லோகீ

கிம் ஜ்யோதிஸ்தவ பாநுமாநஹநி மே ராத்ரௌ ப்ரதீபாதிகம்
ஸ்யாதேவம் ரவிதீபதர்சநவிதௌ கிம் ஜ்யோதிராக்யாஹி மே ।
சக்ஷுஸ்தஸ்ய நிமீலநாதிஸமயே கிம் தீர்தியோ தர்சநே
கிம் தத்ராஹமதோ பவாந் பரமகம் ஜ்யோதிஸ்ததஸ்மி ப்ரபோ ॥

## ஶ்ரீகுருவந்தனம்

சங்காரூபேண மச்சித்தம் பங்கீக்ருதமபூத்யயா ।

கிங்கரீ யஸ்ய ஸா மாயா சங்கராசார்யமாச்ரயே ॥ 1 ॥

ப்ரஹ்லாதவரதோ தேவோ யோ ந்ருஸிம்ஹ: பரோ ஹரி: ।

ந்ருஸிம்ஹோபாஸகம் நித்யம் தம் ந்ருஸிம்ஹகுரும் பஜே ॥ 2 ॥

ஶ்ரீஸச்சிதாநந்த சிவாபிநவ்யந்ருஸிம்ஹபாரத்யபிதாந் யதீந்த்ரான் ।

வித்யாநிதீன் மந்த்ரநிதீன் ஸதாத்மநிஷ்டான் பஜே மாநவசம்பூரூபான் ॥ 3 ॥

ஸதாத்மத்யாநநிரதம் விஷயேப்ய: பராங்முகம் ।

நௌமி சாஸ்த்ரேஷு நிஷ்ணாதம் சந்த்ரசேகரபாரதீம் ॥ 4 ॥

விவேகிநம் மஹாப்ரஜ்ஞம் தைர்யௌதார்ய க்ஷமாநிதிம் ।

ஸதாபிநவ பூர்வம் தம் வித்யாதீர்த்த குரும் பஜே ॥ 5 ॥

அஜ்ஞாநாம் ஜாஹ்நவீ தீர்த்தம் வித்யாதீர்த்தம் விவேகிநாம் ।

ஸர்வேஷாம் ஸுகதம் தீர்த்தம் பாரதீதீர்த்தமாச்ரயே ॥ 6 ॥

வித்யாவிநயஸம்பந்நம் வீதராகம் விவேகிநம் ।

வந்தே வேதாந்த தத்த்வஜ்ஞம் விதுசேகரபாரதீம் ॥ 7 ॥

## बिरुदावलिः

श्रीमत्परमहंस–परिव्राजकाचार्यवर्य–

पदवाक्यप्रमाणपारावारपारीण

यमनियामासन–प्राणायामप्रत्याहारधारणाध्यान

समाध्यष्टाङ्गयोगानुष्टाननिष्ट–तपश्चक्रवर्ती–

अनाद्यविच्छिन्नश्रीशङ्कराचार्यगुरुपरंपराप्राप्त–षड्दर्शनस्थापनाचार्य–
व्याख्यानसिंहासनाधीश्वर–सकलनिगमागमसारहृदय–

सांख्यत्रयप्रदिपादक–वैदिकमार्गप्रवर्तक–

सर्वतन्त्रस्वतन्त्र–आदिराजधानी–विद्यानगरमहाराजधानी–
कर्णाटकसिंहासनप्रतिष्टापनाचार्य–श्रीमद्राजाधिराजगुरु–
भूमण्डलाचार्य–ऋष्यशृङ्गपुरवराधीश्वर–

तुङ्गभद्रातीरवासी–श्रीमद्विद्याशङ्करपादपद्माराधक–

श्रीमज्ज्गद्गुरु–श्रीमदभिनवविद्यातीर्थमहास्वामि

गुरुकरकमलसञ्जात–

श्रीमज्जगद्गुरु–श्रीश्रीभारतीतीर्थमहास्वामिनाम्–

तत्करकमलसञ्जात–

श्रीमज्जगद्गुरु–श्रीविधुशेखरभारती महास्वामिनाञ्च –

चरणारविन्दयोः

साष्टाङ्गप्रणामान् समर्पयामः

## பிருதாவளி

ஸ்ரீமத்பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யவர்ய –

பதவாக்யப்ரமாணபாராவாரபாரீண –

யமனியமாஸன – ப்ராணாயாமப்ரத்யாஹாரதாரணாத்யான

ஸமாத்யஷ்டாங்கயோகானுஷ்டானனிஷ்ட– தபஸ்சக்ரவர்தி–

அனாத்யவிச்சின்னஸ்ரீசங்கராசார்யகுருபரம்பராப்ராப்த–

ஷட்தர்சனஸ்தாபனாசார்ய–வ்யாக்யானஸிம்ஹாஸனதீச்வர–

ஸகலனிகமாகமஸாரஹ்ருதய–

ஸாங்க்யத்ரயப்ரதிபாதக–வைதிகமார்கப்ரவர்தக–

ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர–ஆதிராஜதானீ– வித்யாநகரமஹாராஜதானீ–

கர்ணாடகஸிம்ஹாஸனப்ரதிஷ்டாபனாசார்ய–ஸ்ரீமத்ராஜாதிராஜகுரு–

பூமண்டலாசார்ய–ருஷ்யச்ருங்கபுரவராதீச்வர–

துங்கபத்ராதீரவாஸி– ஸ்ரீமத்வித்யாசங்கரபாதபத்மாராதக–

ஸ்ரீமஜ்ஜகத்குரு–ஸ்ரீமதபினவவித்யாதீர்த மஹாஸ்வாமி

குருகரகமலஸஞ்ஜாத–

ஸ்ரீமஜ்ஜகத்குரு–ஸ்ரீபாரதீதீர்தமஹாஸ்வாமினாம்

தத்கரகமலஸஞ்ஜாத–

ஸ்ரீமஜ்ஜகத்குரு–ஸ்ரீவிதுசேகரபாரதீ–மஹாஸ்வாமினாஞ்ச

சரணாரவிந்தயோ:

ஸாஷ்டாங்கப்ரணாமான் ஸமர்பயாம: ||

# श्री शारदा भुजङ्ग प्रयाताष्टकम्

सुवक्षोजकुम्भां सुधापूर्णकुम्भां
प्रसादावलम्बां प्रपुण्यावलम्बाम् ।
सदास्येन्दुबिम्बां सदानोष्ठबिम्बां
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ १ ॥

कटाक्षे दयार्द्रां करे ज्ञानमुद्रां
कलाभिर्विनिद्रां कलापैः सुभद्राम् ।
पुरस्त्रीं विनिद्रां पुरस्तुङ्गभद्रां
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ २ ॥

ललामाङ्कफालां लसद्गानलोलां
स्वभक्तैकपालां यशः श्रीकपोलाम् ।
करे त्वक्षमालां कनत्प्रत्नलोलां
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ ३ ॥

सुसीमन्तवेणीं दृशा निर्जितैणीं
रमत्कीरवाणीं नमद्वज्रपाणिम् ।
सुधामन्थरास्यां मुदा चिन्त्यवेणीं
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ ४ ॥

## ஶ்ரீசாரதா புஜங்க ப்ரயாதாஷ்டகம்

ஸுவக்ஷோஜகும்பாம் ஸுதாபூர்ணகும்பாம்

ப்ரஸாதாவலம்பாம் ப்ரபுண்யாவலம்பாம் ।

ஸதாஸ்யேந்துபிம்பாம் ஸதாநோஷ்டபிம்பாம்

பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம் ॥ 1 ॥

கடாக்ஷே தயார்த்ராம் கரே ஜ்ஞாநமுத்ராம்

கலாபிர்விநித்ராம் கலாபை: ஸுபத்ராம்

புரஸ்த்ரீம் விநித்ராம் புரஸ்துங்கபத்ராம்

பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம் ॥ 2 ॥

லலாமாங்கபாலாம் லஸத்காநலோலாம்

ஸ்வபக்தைகபாலாம் யச: ஶ்ரீகபோலாம் ।

கரே த்வக்ஷமாலாம் கநத்ப்ரத்நலோலாம்

பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம் ॥ 3 ॥

ஸுஸீமந்தவேணீம் த்ருசா நிர்ஜிதைணீம்

ரமத்கீரவாணீம் நமத்வஜ்ரபாணிம் ।

ஸுதாமந்தராஸ்யாம் முதா சிந்த்யவேணீம்

பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம் ॥ 4 ॥

सुशान्तां सुदेहां दृगन्ते कचान्तां
लसत्सल्लताङ्गीमनन्तामचिन्त्याम् ।
स्मृतां तापसैः सर्गपूर्वस्थितां तां
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ ५ ॥

कुरङ्गे तुरङ्गे मृगेन्द्रे खगेन्द्रे
मराले मदेभे महोक्षेऽधिरूढाम् ।
महत्यां नवम्यां सदा सामरूपां
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ ६ ॥

ज्वलत्कान्तिवह्निं जगन्मोहनाङ्गीं
भजन्मानसाम्भोजसुभ्रान्तभृङ्गीम् ।
निजस्तोत्रसङ्गीतनृत्यप्रभाङ्गीं
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ ७ ॥

भवाम्भोजनेत्राजसम्पूज्यमानां
लसन्मन्दहासप्रभावक्त्रचिह्नाम् ।
चलच्चञ्चलाचारुताटङ्ककर्णां
भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥ ८ ॥

ஸுசாந்தாம் ஸுதேஹாம் த்ருகந்தே கசாந்தாம்

லஸத்ஸல்லதாங்கீமனந்தாமசிந்த்யாம் ।

ஸ்ம்ருதாம் தாபஸை: ஸர்கபூர்வஸ்திதாம் தாம்

பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம் ॥ 5 ॥

குரங்கே துரங்கே ம்ருகேந்த்ரே ககேந்த்ரே

மராலே மதேபே மஹோக்ஷேதிரூடாம் ।

மஹத்யாம் நவம்யாம் ஸதா ஸாமரூபாம்

பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம் ॥ 6 ॥

ஜ்வலத்காந்திவந்ஹிம் ஜகந்மோஹநாங்கீம்

பஜந்மாநஸாம்போஜஸுப்ராந்தப்ருங்கீம் ।

நிஜஸ்தோத்ர ஸங்கீத ந்ருத்யப்ரபாங்கீம்

பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம் ॥ 7 ॥

பவாம்போஜ நேத்ராஜ ஸம்பூஜ்யமாநாம்

லஸந்மந்தஹாஸப்ரபாவக்த்ரசிந்ஹாம் ।

சலச்சஞ்சலாசாரு தாடங்க கர்ணாம்

பஜே சாரதாம்பாமஜஸ்ரம் மதம்பாம் ॥ 8 ॥

## सङ्कल्पः

ममोपात्त–समस्त–दुरितक्षयद्वारा श्रीपरमेश्वर–प्रीत्यर्थं
सर्वेषां आस्तिकमहाजनानां
क्षेम–स्थैर्य–वीर्यविजय–अभय–आयुरारोग्य–ऐश्वर्य–अभिवृद्ध्यर्थं
समस्त–दुरितोपशान्त्यर्थं, समस्त–मङ्गल–अवाप्त्यर्थं,
समस्त–अभ्युदयार्थं च
धर्म–अर्थ–काम–मोक्षाख्य चतुर्विधपुरुषार्थ–सिद्ध्यर्थं,
श्रीमच्छङ्कर–भगवत्पादाचार्याख्य सद्गुरु प्रसादसिद्ध्यर्थं,
श्रीसद्गुरुप्रसादेन सर्वेषां आस्तिकमहाजनानां
सद्विद्या–सद्बुद्धि–प्राप्त्यर्थं,
चित्तशान्ति–सुख–सन्तोषादि–अभिवृद्ध्यर्थं, देश–उपप्लव–निवृत्त्यर्थं,
श्रीमच्छङ्कर–भगवत्पादाचार्य प्रीत्यर्थं
श्रीमच्छङ्कर–भगवत्पादाचार्य अष्टोत्तर शतनाम पारायणं करिष्ये ॥

## श्रीशङ्कर भगवत्पादाचार्य अष्टोत्तर शतनामावलिः

| | | |
|---|---|---|
| श्रीशङ्कराचार्यवर्याय | नमः | |
| ब्रह्मानन्दप्रदायकाय | नमः | |
| अज्ञानतिमिरादित्याय | नमः | |
| सुज्ञानाम्बुधिचन्द्रमसे | नमः | |
| वर्णाश्रमप्रतिष्ठात्रे | नमः | ५ |
| श्रीमते | नमः | |
| मुक्तिप्रदायकाय | नमः | |

## ஸங்கல்ப:

மமோபாத்த–ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீபரமேச்வர–ப்ரீத்யர்த்தம்

ஸர்வேஷாம் ஆஸ்திகமஹாஜநாநாம்

க்ஷேம–ஸ்தைர்ய–வீர்ய–விஜய–அபய–ஆயுராரோக்ய–ஐச்வர்ய–அபிவ்ருத்யர்த்தம்,

ஸமஸ்த–துரிதோபசாந்த்யர்த்தம், ஸமஸ்த–மங்கல–அவாப்த்யர்த்தம்,

ஸமஸ்த–அப்யுதயார்த்தம் ச

தர்ம–அர்த்த–காம–மோக்ஷாக்ய சதுர்விதபுருஷார்த்த–ஸித்த்யர்த்தம்,

ஸ்ரீமச்சங்கர–பகவத்பாதாசார்யாக்ய ஸத்குரு ப்ரஸாதஸித்த்யர்த்தம்,

ஸ்ரீஸத்குருப்ரஸாதேந ஸர்வேஷாம் ஆஸ்திகமஹாஜநாநாம்

ஸத்வித்யா–ஸத்புத்தி–ப்ராப்த்யர்த்தம்,

சித்தசாந்தி–ஸுக–ஸந்தோஷாதி–அபிவ்ருத்யர்த்தம்,தேச–உபப்லவ–நிவ்ருத்யர்த்தம்,

ஸ்ரீமச்சங்கர–பகவத்பாதாசார்ய ப்ரீத்யர்த்தம்

ஸ்ரீமச்சங்கர–பகவத்பாதாசார்ய அஷ்டோத்தரசதநாம பாராயணம் கரிஷ்யே

## ஸ்ரீசங்கர பகவத்பாதாசார்ய அஷ்டோத்தர சதநாமாவளி:

| | | |
|---|---|---|
| ஸ்ரீசங்கராசார்யவர்யாய | நம: | |
| ப்ரஹ்மாநந்தப்ரதாயகாய | நம: | |
| அஜ்ஞாநதிமிராதித்யாய | நம: | |
| ஸுஜ்ஞாநாம்புதிசந்த்ரமஸே | நம: | |
| வர்ணாச்ரமப்ரதிஷ்டாத்ரே | நம: | 5 |
| ஸ்ரீமதே | நம: | |
| முக்திப்ரதாயகாய | நம: | |

| | | |
|---|---|---|
| शिष्योपदेशनिरताय | नमः | |
| भक्ताभीष्टप्रदायकाय | नमः | |
| सूक्ष्मतत्त्वरहस्यज्ञाय | नमः | १० |
| कार्याकार्यप्रबोधकाय | नमः | |
| ज्ञानमुद्राञ्चितकराय | नमः | |
| शिष्यहृत्तापहारकाय | नमः | |
| परिव्राजाश्रमोद्धर्त्रे | नमः | |
| सर्वतन्त्रस्वतन्त्रधिये | नमः | १५ |
| अद्वैतस्थापनाचार्याय | नमः | |
| साक्षाच्छङ्कररूपधृते | नमः | |
| षण्मतस्थापनाचार्याय | नमः | |
| त्रयीमार्गप्रकाशकाय | नमः | |
| वेदवेदान्ततत्त्वज्ञाय | नमः | २० |
| दुर्वादिमतखण्डनाय | नमः | |
| वैराग्यनिरताय | नमः | |
| शान्ताय | नमः | |
| संसारार्णवतारकाय | नमः | |
| प्रसन्नवदनाम्भोजाय | नमः | २५ |
| परमार्थप्रकाशकाय | नमः | |
| पुराणस्मृतिसारज्ञाय | नमः | |
| नित्यतृप्ताय | नमः | |
| महते | नमः | |
| शुचये | नमः | ३० |
| नित्यानन्दाय | नमः | |

சிஷ்யோபதேசநிரதாய நம:

பக்தாபீஷ்டப்ரதாயகாய நம:

ஸூக்ஷ்மதத்த்வரஹஸ்யஜ்ஞாய நம: 10

கார்யாகார்யப்ரபோதகாய நம:

ஜ்ஞாநமுத்ராஞ்சிதகராய நம:

சிஷ்யஹ்ருத்தாபஹாரகாய நம:

பரிவ்ராஜாச்ரமோத்தர்த்ரே நம:

ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரதியே நம: 15

அத்வைதஸ்தாபநாசார்யாய நம:

ஸாக்ஷாச்சங்கரரூபத்ருதே நம:

ஷண்மதஸ்தாபநாசார்யாய நம:

த்ரயீமார்கப்ரகாசகாய நம:

வேதவேதாந்ததத்த்வஜ்ஞாய நம: 20

துர்வாதிமதகண்டநாய நம:

வைராக்யநிரதாய நம:

சாந்தாய நம:

ஸம்ஸாரார்ணவதாரகாய நம:

ப்ரஸந்நவதநாம்போஜாய நம: 25

பரமார்தப்ரகாசகாய நம:

புராணஸ்ம்ருதிஸாரஜ்ஞாய நம:

நித்யத்ருப்தாய நம:

மஹதே நம:

சுசயே நம: 30

| | | |
|---|---|---|
| निरातङ्काय | नमः | |
| निस्सङ्गाय | नमः | |
| निर्मलात्मकाय | नमः | |
| निर्ममाय | नमः | ३५ |
| निरहङ्काराय | नमः | |
| विश्ववन्द्यपदाम्बुजाय | नमः | |
| सत्त्वप्रधानाय | नमः | |
| सद्भावाय | नमः | |
| सङ्ख्यातीतगुणोज्ज्वलाय | नमः | ४० |
| अनघाय | नमः | |
| सारहृदयाय | नमः | |
| सुधिये | नमः | |
| सारस्वतप्रदाय | नमः | |
| सत्यात्मने | नमः | ४५ |
| पुण्यशीलाय | नमः | |
| साङ्ख्ययोगविचक्षणाय | नमः | |
| तपोराशये | नमः | |
| महातेजसे | नमः | |
| गुणत्रयविभागविदे | नमः | ५० |
| कलिघ्नाय | नमः | |
| कालकर्मज्ञाय | नमः | |
| तमोगुणनिवारकाय | नमः | |
| भगवते | नमः | |
| भारतीजेत्रे | नमः | ५५ |

நித்யாநந்தாய நம:

நிராதங்காய நம:

நிஸ்ஸங்காய நம:

நிர்மலாத்மகாய நம:

நிர்மமாய நம: 35

நிரஹங்காராய நம:

விச்வவந்த்யபதாம்புஜாய நம:

ஸத்த்வப்ரதாநாய நம:

ஸத்பாவாய நம:

ஸங்க்யாதீதகுணோஜ்ஜ்வலாய நம: 40

அநகாய நம:

ஸாரஹ்ருதயாய நம:

ஸுதியே நம:

ஸாரஸ்வதப்ரதாய நம:

ஸத்யாத்மநே நம: 45

புண்யசீலாய நம:

ஸாங்க்யயோகவிசக்ஷணாய நம:

தபோராசயே நம:

மஹாதேஜஸே நம:

குணத்ரயவிபாகவிதே நம: 50

கலிக்நாய நம:

காலகர்மஜ்ஞாய நம:

தமோகுணநிவாரகாய நம:

| | | |
|---|---|---|
| शारदाह्वानपण्डिताय | नमः | |
| धर्माधर्मविभागज्ञाय | नमः | |
| लक्ष्यभेदप्रदर्शकाय | नमः | |
| नादबिन्दुकलाभिज्ञाय | नमः | |
| योगिहृत्पद्मभास्कराय | नमः | ६० |
| अतीन्द्रियज्ञाननिधये | नमः | |
| नित्यानित्यविवेकवते | नमः | |
| चिदानन्दाय | नमः | |
| चिन्मयात्मने | नमः | |
| परकायप्रवेशकृते | नमः | ६५ |
| अमानुषचरित्राढ्याय | नमः | |
| क्षेमदायिने | नमः | |
| क्षमाकराय | नमः | |
| भव्याय | नमः | |
| भद्रप्रदाय | नमः | ७० |
| भूरिमहिम्ने | नमः | |
| विश्वरञ्जकाय | नमः | |
| स्वप्रकाशाय | नमः | |
| सदाधाराय | नमः | |
| विश्वबन्धवे | नमः | ७५ |
| शुभोदयाय | नमः | |
| विशालकीर्तये | नमः | |
| वागीशाय | नमः | |
| सर्वलोकहितोत्सुकाय | नमः | |

பகவதே நம:

பாரதீஜேத்ரே நம: 55

சாரதாஹ்வாநபண்டிதாய நம:

தர்மாதர்மவிபாகஜ்ஞாய நம:

லக்ஷ்யபேதப்ரதர்சகாய நம:

நாதபிந்துகலாபிஜ்ஞாய நம:

யோகிஹ்ருத்பத்மபாஸ்கராய நம: 60

அதீந்த்ரியஜ்ஞாநநிதயே நம:

நித்யாநித்யவிவேகவதே நம:

சிதாநந்தாய நம:

சிந்மயாத்மநே நம:

பரகாயப்ரவேசக்ருதே நம: 65

அமாநுஷசரித்ராட்யாய நம:

க்ஷேமதாயிநே நம:

க்ஷமாகராய நம:

பவ்யாய நம:

பத்ரப்ரதாய நம: 70

பூரிமஹிம்நே நம:

விச்வரஞ்ஜகாய நம:

ஸ்வப்ரகாசாய நம:

ஸதாதாராய நம:

விச்வபந்தவே நம: 75

சுபோதயாய நம:

| | | |
|---|---|---|
| कैलासयात्रा–सम्प्राप्त–चन्द्रमौलि–प्रपूजकाय | नमः | ८० |
| काञ्च्यां श्रीचक्रराजाख्य–यन्त्रस्थापन–दीक्षिताय | नमः | |
| श्रीचक्रात्मक–ताटङ्क–तोषिताम्बा–मनोरथाय | नमः | |
| श्रीब्रह्मसूत्रोपनिषद्भाष्यादि–ग्रन्थकल्पकाय | नमः | |
| चतुर्दिक्चतुराम्नाय प्रतिष्ठात्रे | नमः | |
| महामतये | नमः | ८५ |
| द्विसप्ततिमतोच्छेत्रे | नमः | |
| सर्वदिग्विजयप्रभवे | नमः | |
| काषायवसनोपेताय | नमः | |
| भस्मोद्धूलितविग्रहाय | नमः | |
| ज्ञानात्मकैकदण्डाढ्याय | नमः | ९० |
| कमण्डलुलसत्कराय | नमः | |
| गुरुभूमण्डलाचार्याय | नमः | |
| भगवत्पादसञ्ज्ञकाय | नमः | |
| व्याससन्दर्शनप्रीताय | नमः | |
| ऋष्यशृङ्गपुरेश्वराय | नमः | ९५ |
| सौन्दर्यलहरीमुख्य–बहुस्तोत्र–विधायकाय | नमः | |
| चतुष्षष्टिकलाभिज्ञाय | नमः | |
| ब्रह्मराक्षसमोक्षदाय | नमः | |
| श्रीमन्मण्डनमिश्राख्य–स्वयम्भूजय–सन्नुताय | नमः | |
| तोटकाचार्यसम्पूज्याय | नमः | १०० |
| पद्मपादार्चिताङ्घ्रिकाय | नमः | |
| हस्तामलक–योगीन्द्र–ब्रह्मज्ञान–प्रदायकाय | नमः | |
| सुरेश्वराख्य–सच्छिष्य–सन्न्यासाश्रमदायकाय | नमः | |

விசாலகீர்தயே நம:

வாகீசாய நம:

ஸர்வலோகஹிதோத்ஸுகாய நம:

கைலாஸயாத்ரா-ஸம்ப்ராப்த-சந்த்ரமௌலி-ப்ரபூஜகாய நம: 80

காஞ்ச்யாம் ஸ்ரீசக்ரராஜாக்ய-யந்த்ரஸ்தாபந-தீக்ஷிதாய நம:

ஸ்ரீசக்ராத்மக-தாடங்க-தோஷிதாம்பா-மநோரதாய நம:

ஸ்ரீப்ரஹ்மஸூத்ரோபநிஷத்பாஷ்யாதி-க்ரந்தகல்பகாய நம:

சதுர்திக்சதுராம்நாய ப்ரதிஷ்டாத்ரே நம:

மஹாமதயே நம: 85

த்விஸப்ததிமதோச்சேத்ரே நம:

ஸர்வதிக்விஜயப்ரபவே நம:

காஷாயவஸநோபேதாய நம:

பஸ்மோத்தூலிதவிக்ரஹாய நம:

ஜ்ஞாநாத்மகைகதண்டாட்யாய நம: 90

கமண்டலுலஸத்கராய நம:

குருபூமண்டலாசார்யாய நம:

பகவத்பாதஸம்ஜ்ஞகாய நம:

வ்யாஸஸந்தர்சநப்ரீதாய நம:

ருஷ்யச்ருங்கபுரேச்வராய நம: 95

ஸௌந்தர்யலஹரீமுக்ய-பஹுஸ்தோத்ர-விதாயகாய நம:

சதுஷ்ஷஷ்டிகலாபிஜ்ஞாய நம:

ப்ரஹ்மராக்ஷஸமோக்ஷதாய நம:

ஸ்ரீமந்மண்டநமிச்ராக்ய-ஸ்வயம்பூஜய-ஸந்நுதாய நம:

नृसिंहभक्ताय नमः
सद्रत्नगर्भहेरम्ब–पूजकाय नमः १०५
व्याख्यासिंहासनाधीशाय नमः
जगत्पूज्याय नमः
जगद्गुरवे नमः १०८
श्रीमच्छङ्करभगवत्पादाचार्यस्वामिने नमः

## मङ्गलम्

मङ्गलं गुरु श्री चन्द्रमौलीश्वरगे
शक्तिगणपति शारदाम्बेगे शङ्कराचार्यरिगे ॥ प ॥
कालभैरवगे कालि दुर्गिगे
वीर धीर शूर हनुम मारुति चरणक्के ॥ १ ॥
मल्लिकार्जुनगे चेल्व जनार्दनगे
अम्बाभवानि कम्बद गणपति चंडिचामुंडिगे ॥ २ ॥
विद्यारण्यरिगे विद्याशङ्करगे
वागीश्वरिगे वज्रदेह गरुडाञ्जनेयरिगे ॥ ३ ॥
तुङ्गभद्रेगे शृङ्गनिवासिनिगे
शृङ्गेरिपुरदोलु नेलेसिरुवन्थ शारदाम्बेगे ॥ ४ ॥
सच्चिदानन्द शिव अभिनव नृसिंहभारतिगे
चन्द्रशेखरभारती गुरु सार्वभौमरिगे
चन्द्रशेखरभारती गुरु विद्यातीर्थरिगे
चन्द्रशेखरभारती गुरु भारतीतीर्थरिगे
चन्द्रशेखरभारती गुरु विधुशेखरभारतिगे ॥ ५ ॥

| | | |
|---|---|---|
| தோடகாசார்யஸம்பூஜ்யாய | நம: | 100 |
| பத்மபாதார்சிதாங்க்ரிகாய | நம: | |
| ஹஸ்தாமலக-யோகீந்த்ர-ப்ரஹ்மஜ்ஞாந-ப்ரதாயகாய | நம: | |
| ஸுரேச்வராக்ய-ஸச்சிஷ்ய-ஸந்ந்யாஸாச்ரமதாயகாய | நம: | |
| ந்ருஸிம்ஹபக்தாய | நம: | |
| ஸத்ரத்நகர்பஹேரம்ப-பூஜகாய | நம: | 105 |
| வ்யாக்யாஸிம்ஹாஸநாதீசாய | நம: | |
| ஜகத்பூஜ்யாய | நம: | |
| ஜகத்குரவே | நம: | 108 |

ஶ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய ஸ்வாமிநே நம:

**மங்களம்**

மங்களம் குருஶ்ரீ சந்த்ரமௌலீச்வரகே

சக்திகணபதி சாரதாம்பேகே சங்கராசார்யரிகே (ப)

காலபைரவகே காளி துர்கீகே

வீர தீர சூர ஹநும மாருதி சரணக்கே (1)

மல்லிகார்ஜுநகே செல்வஜநார்தநகே

அம்பாபவாநி கம்பத கணபதி சண்டிசாமுண்டீகே (2)

வித்யாரண்யரிகே வித்யாசங்கரகே

வாகீச்வரிகே வஜ்ரதேஹ கருடாஞ்ஜநேயரிகே (3)

துங்கபத்ரேகே ச்ருங்கநிவாஸிநிகே

ச்ருங்கேரிபுரதொளு நேலஸிருவந்த சாரதாம்பேகே (4)

ஸச்சிதாநந்த சிவ அபிநவ ந்ருசிம்ஹபாரதிகே

சந்த்ரசேகரபாரதீ குரு ஸார்வபௌமரிகே

சந்த்ரசேகரபாரதீ குரு வித்யாதீர்த்தரிகே

சந்த்ரசேகரபாரதீ குரு பாரதீதீர்த்தரிகே

சந்த்ரசேகரபாரதீ குரு விதுசேகரபாரதிகே (5)

## ஸ்ரீ சிருங்கேரி சாரதாபீடமும் அதன் பணிகளும்

பரமேச்வரனின் அவதாரமான ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்யாள், சுமார் 1200 வருடங்களுக்கு முன் பாரததேசத்தில் இருந்து வந்த அவைதிக மதங்களைக் கண்டித்ததோடல்லாமல் அதைப் பின்பற்றியவர்களை தன்னுடைய அறிவுப்பூர்வமான வாதங்களால் வென்று, உபநிஷத்துகளில் கூறப்பட்ட அத்வைத தத்துவத்தை மீண்டும் நிலைநாட்டி, அதைப் பரப்புவதற்காக சதுர் ஆம்நாய பீடங்களை நிறுவினார். அவை பூர்வாம்நாய கோவர்தன பீடம், புரி (ஒடிசா), தக்ஷிணாம்னாய சாரதாபீடம், சிருங்கேரி (கர்நாடகா), பச்சிமாம்நாய காளிகா பீடம், துவாரகா (குஜராத்), உத்தராம்நாய ஜ்யோதிஷ்பீடம், பத்ரி (உத்தராகண்ட்).

ஸ்ரீசங்கர பகவத்பாதர் ஸநாதன தர்மத்தை நிலைநாட்டுவதற்கு ஆற்றிய பணிகள் அளப்பரியன. சைவ, வைஷ்ணவ, சாக்த, ஸௌர, காணபத்ய, கௌமார ஆகிய மதங்களில் இருந்த வேத விரோதமான ஆசரணங்களை நீக்கினார். ஸநாதன தர்மத்தின் வரையறையைத் தாண்டிப் போன அந்த மதங்களை நெறிமுறை செய்து மீண்டும் ஸநாதன தர்மத்தின் வரைமுறைக்குக் கொண்டு வந்தார். அதனாலேயே ஸ்ரீசங்கராசார்யாள் "ஷண்மதஸ்தாபநாசார்யாள்" என்று புகழ் பெற்றார். மக்கள் சுலபமாக பகவானைப் பூஜித்து முன்னேற்றத்தை அடைய வேண்டும் என்ற கருணை நிறைந்த எண்ணத்தினால் மஹேச்வரர், விஷ்ணு, அம்பிகை, சூரியன், மற்றும் கணபதி இந்த ஐந்து தேவதைகளுடன் கூடிய பஞ்சாயதன பூஜா ஸம்ப்ரதாயத்தை ஆசார்யாள் நடைமுறைக்குக் கொண்டு வந்தார். இந்த இஷ்ட தேவதா பூஜை ஸநாதன தர்மத்தின் சிறப்பு அம்சமாகும். "சாஸ்திரத்தில் கூறப்பட்ட பல தேவதா மூர்த்திகளில் அவரவர்களுடைய விருப்பத்திற்கேற்ற வடிவத்தைப் பூஜை செய்யலாம், ஆனால் தான் பூஜிக்கும் கடவுள் ஒருவனே உயர்ந்தவன் என்று நினைத்து மற்ற தேவதைகளைப் பூஜிப்பவர்களைத் தாழ்வாகப் பார்க்கும் குணம் இருக்கக் கூடாது" என்றும் "இந்த அனைத்து தேவதா வடிவங்களும் ஸகல உலகங்களின்

தலைவனான ஒரே பரமாத்மாவின் வேறுபட்ட ரூபங்களே" என்றும் மக்களுக்கு சத்தியத்தைத் தெளிவாக உபதேசித்த மஹாத்மா ஸ்ரீ சங்கரபகவத்பாதாசாரியாள்.

தக்ஷிணாம்னாய ஸ்ரீசாரதாபீடமானது, விபாண்டகர், ருஷ்ய சிருங்கர் முதலான மஹரிஷிகள் தவத்திலாழ்ந்திருந்த புண்ய பூமியான சிருங்கேரியில் ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்ரீஆதிசங்கராசார்யாள் சிருங்கேரிக்கு வந்த பொழுது துங்காநதிக்கரையில் பாம்பு ஒன்று வெய்யிலில் அவதிப்பட்டுக்கொண்டிருந்த தவளைக்கு நிழல் கொடுப்பதற்குத் தன்னுடைய படத்தை விரித்திருந்த அபூர்வமான காட்சியைப் பார்த்தார். பிறவி எதிரிகளும் கூட ஒன்றுடன் ஒன்று அன்புடன் வாழும் இந்த இடத்தின் புனிதத்தை உணர்ந்த அவர், முதலாவது ஆம்நாய பீடமான ஸ்ரீசாரதா பீடத்தை இவ்விடத்திலேயே ஸ்தாபித்தார். தம்முடைய நான்கு முக்கிய சிஷ்யர்களில் முதன்மையாக இருந்த ஸ்ரீசுரேச்வராச்சாரியார் அவர்களை இங்கு முதலாவது பீடாதிபதிகளாக நியமித்தார். தமது பொன்னான 32 வருட ஆயுளில் பல வருஷங்கள் சிருங்கேரியிலேயே தங்கி பாஷ்யபாடங்களை சிஷ்யர்களுக்குக் கற்பித்து வந்தார். அன்று முதல் இன்று வரை இந்த பீடத்தின் குருபரம்பரை இடைவிடாமல் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. இன்று இப்பீடத்தில் ரத்தினமாக பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஜகத்குரு சங்கராசார்யாள், ஸ்ரீஸ்ரீஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் வேத சாஸ்திர பாண்டித்யத்திலும், தபஸ்ஸிலும், பலமொழிப்புலமையிலும், கருணையிலும் ஈடு இணையற்றவராகத் திகழ்ந்து கொண்டு பக்தர்களை அருள் பாலித்து வருகிறார். அவருடைய உத்தராதிகாரி சிஷ்யரான ஜகத்குரு சங்கராசார்யாள் ஸ்ரீஸ்ரீஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகளும் தங்களுடைய குருவின் வழிகாட்டுதலில் தர்மத்தைச் சிறப்பாக ஆசரணம் செய்து கொண்டு பக்தர்களுக்கும் உபதேசித்து வருகிறார்.

ஸ்ரீசங்கர பகவத்பாதர் பாரதத்தின் நான்கு திசைகளில் நான்கு மடங்களை ஸ்தாபித்த பொழுது பக்த ஜனங்களுடைய மனத்தில் ஆன்மீக எண்ணத்தை இந்த மடங்கள் வளர்க்க வேண்டும் என்று

விரும்பியிருந்தார். அதன்படியே சிருங்கேரியின் ஜகத்குருக்கள் நாடு முழுவதும் விஜய யாத்திரையை நடத்தி, அந்தந்த இடங்களில் வாழும் மக்களின் நலனுக்காக பூஜைகள் மற்றும் உபதேசங்கள் செய்வதின் மூலம் அவர்களை தர்ம மார்கத்தில் ஈடுபடுத்தி வருகிறார்கள்.

சிருங்கேரி சங்கர மடம் என்றே பிரசித்தமாக அழைக்கப்படும் ஜகத்குரு சங்கராசார்ய மஹாஸம்ஸ்தானமானது ஆரம்பத்திலிருந்தே ஒரு சமூகத்திற்கோ, அல்லது ஒரு சமுதாயத்தினுடைய மடமாகவோ அல்லாமல் அனைவருக்கும் குருபீடமாக இருந்து வருகிறது. எனவே ஏழை – பணக்காரன், பண்டிதன் – பாமரன் என்ற வேறுபாடு இல்லாமல் அனைவரும் ஸ்ரீஜகத்குருக்களுக்குப் பக்தியுடன் பணிந்து நடந்து கொண்டு அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெறுகிறார்கள். ஸ்ரீமடம் ஜாதி, மதம், வேறுபாடு இல்லாமல் நாட்டின் பல பாகங்களில் வசித்துவரும் எண்ணற்ற சிஷ்யர்களைப் பெற்றுள்ளது.

**சிருங்கேரி ஸ்ரீசாரதா பீடத்தின் அரும்பெரும் பணிகள்**

ஸ்ரீசிருங்கேரி சாரதா பீடத்திற்கு சிருங்கேரியில் மட்டுமல்லாமல் நாடு முழுவதிலும் சுமார் 200க்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன. இந்த அனைத்துக் கிளைகளிலும் நிரந்தரமாக ஆன்மீகச் செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன. நம்நாட்டிலும், வெளிநாட்டிலும் பரந்திருக்கும் கிளைமடங்கள், உபநிறுவனங்கள் ஆகியவற்றுடைய அனைத்து பணிகளையும், ஜகத்குருவினுடைய கட்டளையின்படி, அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் நிர்வகிப்பார்கள்.

சிருங்கேரியில் ஸ்ரீ ஸத்வித்யா ஸஞ்ஜீவினீ ஸம்ஸ்க்ருத மஹாபாடசாலை சுமார் 120 வருடங்களாக ஸ்ரீமடத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு நூற்றுக்கணக்கான மாணவர்கள் சம்ப்ரதாய முறையில் வேத சாஸ்திரங்களைப் பயின்று வருகிறார்கள். மேலும் காலடி, பெங்களூர், ஹைதராபாத், ஸித்தாபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் போன்ற இடங்களிலும் வேத பாடசாலைகளை நடத்திக் கொண்டிருக்கிறது. இந்த அனைத்துப் பாடசாலைகளிலும் மாணவர்களுக்குப் படிப்பதற்கு வேண்டிய அனைத்து வசதிகளும் இலவசமாகச் செய்து தரப்பட்டுள்ளன.

வேத சாஸ்திரங்களின் பாதுகாப்பிற்காகவும் மற்றும் வேத பண்டிதர்களைப் போஷிப்பதற்காகவும் பல கார்யங்களை ஸ்ரீமடம் ஏற்று நடத்தி வருகிறது. மாதந்தோறும் வயதான வேதபண்டிதர்களுக்கு கௌரவப் பணம், சங்கர ஜயந்தியின் சமயத்தில் வேத பண்டிதர்களையும், விநாயக சதுர்த்தி சமயத்தில் சுமார் இரண்டு வார காலம், ஜகத்குருவின் தலைமையில் நடைபெறும் ஸ்ரீமஹாகணபதி வாக்யார்த்த சபையில் சாஸ்திர பண்டிதர்களையும் கௌரவித்தல் முதலியவை இதில் அடங்கும்.

சிருங்கேரியில் அபிநவ வித்யாதீர்த்த உயர்நிலைப்பள்ளி, பெலவாடியில் உத்பவகணபதி உயர்நிலைப்பள்ளி, பெங்களூரில் ஞானோதயா பள்ளி, புதுடெல்லியின் ஸ்ரீசாரதா மேனேஜ்மென்ட் ஸ்தாபனம், ஷோரனூரில் ஆயுர்வேத கல்லூரி, காலடியில் ஸ்ரீசங்கராசார்யார் பொறியியல் கல்லூரி, நோய்டா, திருப்பூர், சென்னை, பெங்களூர் முதலிய இடங்களில் மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி முதலியவை கல்வித்துறையில் ஸ்ரீமடம் ஆற்றும் பணிகளுக்குச் சான்று பகர்கின்றன. இந்தக் கல்வி ஸ்தாபனங்களில் மிக உயர்தரக் கல்வி வழங்கப்படுகிறது.

சிருங்கேரியில் சாரதா தன்வந்தரி மருத்துவமனையையும் பெங்களூர், ஹைதராபாத், சேலம் மற்றும் பல இடங்களில் மருத்துவமனைகளையும் ஸ்ரீமடம் நடத்திக் கொண்டிருக்கிறது. பெங்களூர் மருத்துவமனையில் ஏழை எளிய மக்களுக்காக மிகக் குறைந்த செலவில் டயாலிசிஸ் செய்யும் வசதி ஸ்ரீமடத்திலிருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் புற்று நோயாளிகளுக்கு மலிவு விலையில், சிறந்த மருத்துவ வசதி அளிப்பதற்கு, பெங்களூரில் ஸ்ரீ சங்கரா நேஷனல் சென்டர் ஃபார் கேன்சர் ப்ரிவென்ஷன் அண்ட் ரிசர்ச் என்னும் ஸ்தாபனம் அண்மையில் ஜனாதிபதி ப்ரணாப் முகர்ஜி அவர்களால் திறந்து வைக்கப் பட்டது.

ஸநாதன தர்மத்திற்கு சம்பந்தப்பட்ட புத்தகங்களை தகுந்த காலங்களில், மக்களுக்கு பயன் பெறும் வகையில் ஸ்ரீமடத்தின், வித்யாபாரதீ அச்சகத்தின் மூலம், அச்சிட்டு மலிவு விலையில் அளித்து

வருகிறது. பல மொழிகளில் மாதப்பத்திரிகைகளும் ஸ்ரீமடத்தின் சார்பில் வெளியிடப்படுகின்றன. பனை ஓலைகளிலும், காகிதத்திலும், கையெழுத்துப் பிரதியாகவே, இருந்து வரும் சாஸ்திர சம்மந்தப்பட்ட நூல்கள், புத்தக வடிவத்திலும், அனைவருக்கும் எளிதில் கிடைக்கும் வண்ணம் இணையதளங்களிலும், ஸ்ரீமடத்தின் சங்கர அத்வைத ஆராய்ச்சி மையத்தின் மூலம், வெளியிடப் படுகின்றன.

திருமலை, வாரணாசி, ஹரித்வார், கயா, ராமேஸ்வரம், ஸ்ரீசைலம், கோகர்ணம், காலடி போன்ற பல தீர்த்தக்ஷேத்ரங்களில் யாத்திரை செய்யும் பக்தர்களுக்கு வசதியுடன் தங்குவதற்காக விடுதிகளை ஸ்ரீமடம் கட்டியுள்ளது. சிருங்கேரியிலும் யாத்ரிகர்களின் வசதிக்காக மிகச் சிறந்த விருந்தினர் விடுதிகளை ஸ்ரீமடம் நிர்மாணித்துள்ளது.

பகலிலும் இரவிலும் ஸ்ரீசாரதா பிரஸாத ரூபமாக தினந்தோறும் சுமார் 15,000க்கும் அதிகமானோருக்கு அன்னதானம் அளிக்கப்படுகிறது. ஒரே நேரத்தில் மூவாயிரம் பக்தர்கள் அமர்ந்து சாப்பிடுவதற்கேற்ற பெரிய போஜன சாலை ஸ்ரீமடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. சிருங்கேரியைச் சுற்றியுள்ள கிராமங்களில் இயங்கும் பள்ளி கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவியருக்கும் மதிய உணவு மடத்திலிருந்து வழங்கப்படுகிறது.

இவ்வாறு உலக நன்மைக்காக பல வழிகளில் செயல்படும் சிருங்கேரி மடம் ஆன்மீக மற்றும் சமூகப்பணிகளில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்ந்து வருகிறது.